செய்திக் குறிப்பு எண் :- 67 நாள் :- 04.03.2013

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 4.3.2013

சென்னை மாவட்டம், கோட்டை- தண்டையார்பேட்டை வட்டம், எருக்கஞ்சேரி, பாப்பாத்தி அம்மன் கோயில் தெருவில் உள்ள குடிசையில் 1.3.2013 அன்று அதிகாலை 12.45 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் திருமதி சரோஜா அம்மாள், திருமதி மீனாட்சி அம்மாள் மற்றும் திருமதி ராஜம்மாள் ஆகியோர் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்தத் தீ விபத்தில் அகால மரணமடைந்த திருமதி சரோஜா அம்மாள், திருமதி மீனாட்சி அம்மாள் மற்றும் திருமதி ராஜம்மாள் ஆகியோரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த தீ விபத்தில் உயிரிழந்த திருமதி சரோஜா அம்மாள், திருமதி மீனாட்சி அம்மாள் மற்றும் திருமதி ராஜம்மாள் ஆகியோரின் குடும்பத்தினருக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாயும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாயும், ஆக மொத்தம் தலா இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9